# ஐம்புலன் அடக்கத்தில் நாவடக்கம் - ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

*ஏ.எல்.எம்.முஜாஹித், சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை*

*+94712135555,*

*mujahidm@esn.ac.lk*

## அறிமுகம்

எமது உடல் உறுப்புக்கள் அனைத்தும் இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட மாபெரும் அருட்கொடைகளாகும். ஐம்புலன்களை எமது இச்சைப்படி பயன்படுத்த முடியுமாக இருந்தாலும் அவற்றை வரையறைகள், கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்துவதே மனித வாழ்வு பண்பட, செம்மைப்படுத்த சிறந்த வழியாக அமையும். மனிதனுக்குள்ள அவயவங்களிலே நா மிக முக்கியமானதாகையால்தான் இறைவன் மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்தியுள்ளான். ஆகவே மனிதன் நாவைக் காத்தல் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இன்று குடும்பங்களை சிதைத்து, ஊர் ஒற்றுமையைக் குழப்பி, முழு மனித சமூகத்தின் நிம்மதியையும் இல்லாமல் செய்யும் அனைத்துப் பிரச்சினைகளும் நாவு மூலமே நடந்தேறி வருகின்றன.

இதுவரை உலகில் தோன்றிய அனைத்துவிதமான சமய கோட்பாடுகளும், சித்தாந்தங்களும் புராண இதிகாசங்களும் நாவடக்கம் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. நாவைப் பேணும் விடயத்தில் திருக்குறள் பின்வருமாறு கூறுகிறது.

> **"தீயினாற் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே**
> **நாவினாற் சுட்ட வடு"**

தீயினால் சுடப்பட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடுவானது ஒரு போதும் மறையாது.

> **"யாகாவார் ஆயினும் நா காக்க; காவாக்கால்**
> **சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு"**

ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கியாள வேண்டும். அங்ஙனம் அடக்கியாளாவிட்டால் பேசும் பொழுது சொற்குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப்படுவர்.

> **"வில்லம்பை விட சொல்லம்பு வலிமையானது"**

என்று ஒரு அரபுப் பழமொழியும் உண்டு. விட்ட அம்பையும் பேசிய சொல்லையும் மீளப்பெற முடியாது. எனவேதான் நாவைப் பேணுகின்ற விடயத்தில் இஸ்லாம் அதிக கவனத்தைச் செலுத்தியிருக்கின்றது. நாவடக்கம், நாவைப்பேணுதல் போன்ற விடயங்கள் ஹதீஸ்களில் எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளன என்று அறிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஹதீஸ்களில் நாவடக்கம்

பேசும் முன்னரே பேசுவது நல்லதா, கெட்டதா என்பதை ஒருவர் உணர்ந்து நிதானமாகப் பேச வேண்டும். அதனைத் தொடர்ந்து வரும் விளைவுகள் சிலவேளை மிகவும் பாதிப்பானதாகவும் இருக்கக்கூடும். நாம் பேசுகின்ற வார்த்தைகள் எவ்வாறு அமைய வேண்டும், எவ்வாறு நாவடக்கம் பேண வேண்டும், அவ்வாறு அமையாத போது ஏற்படுகின்ற பின் விளைவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் ஹதீஸ்களில் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன.

''யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் உண்மையாக நம்புகிறாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் இல்லையென்றால் மௌனமாக இருக்கட்டும்.'' (அறிவிப்பாளர் : அபுஹுறைறா, ஆதாரம் : இப்னு மாஜா 3971)

நாவை உரிய முறையில் பேணிப் பாதுகாத்தலே எம்மை நரகிலிருந்து காப்பதற்கான ஒரே வழியாகும். ''யார் தனது நாவையும், மர்மஸ்தானத்தையும் பாதுகாப்பதாக உறுதி கூறுகின்றாரோ அவருக்குச் சுவனத்தைக் கொண்டு நான் உறுதி மொழி கூறுகின்றேன்'' என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர் : ஸஹ்ல் இப்னு ஸஅத் (றழி), ஆதாரம் : புகாரி (11/ 264,265)

நாம் பேசும் வார்த்தைகள் எவரையும் தாக்காத, எவரது சுயமரியாதைக்கும், தன்மானத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைத்துக் கொள்வதில் கவனமாக இருக்க வேண்டும். அபூமூஸா அல்அஷ்அரி (றழி) அவர்கள் நபிகளாரிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதரே: முஸ்லிம்களில் மிகச் சிறந்தவர்கள் யார்? என வினவ, நபி(ஸல்) அவர்கள் 'எவரது நாவையும் கரத்தையும் விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுாப்புப் பெற்றனரோ அவரே சிறந்த முஸ்லிம்' எனப் பதிலளித்தார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

மேற்படி நபிமொழி முஸ்லிம்களில் யார் பிறருக்கு நாவாலோ, கரத்தாலோ தொல்லை கொடுக்காதிருக்கின்றனரோ அவர்களே சிறந்தவர்கள் என்ற கருத்தைத் தருகின்றது. இதன் மூலம் இங்கு ஏனையவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. தேவையில்லாமல் அளவுக்கதிகம் பேசக்கூடாது. ஏனெனில் ஒருவரது பேச்சை வைத்தே அவரை மக்கள் எடைபோடுகின்றனர். எனவே அவரது பேச்சு இனிமையானதாகவும், மென்மையானதாகவும், பிறர் மனதுக்கு இதம் அளிப்பதாகவும் இருந்தால் அதை வைத்தே மக்களால் அவர் மதிக்கப்படுவார்.

இதனால்தான் ஒவ்வொரு நாள் காலையிலும் உடலிலுள்ள ஏனைய உறுப்புக்கள் நாவைப் பார்த்து ''எங்கள் விடயத்தில் நீ அல்லாஹ்வை அஞ்சிக் கொள்! உன்னை வைத்தே நாம் கணிக்கப்படுகிறோம். நீ சரியாக நடந்து கொண்டால் நாமும் சரியாக நடப்போம். நீ தவறிவிட்டாலோ நாமும் தவறிவிடுவோம் எனக் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

குழப்பமான சூழ்நிலைகளில் எதையுமே பேசாது மௌனமாக இருப்பதே விடிவுக்குரிய வழியாகும். நபி (ஸல்) அவர்கள் குழப்பமான சந்தர்ப்பங்கள் பற்றி உரையாடிக்

கொண்டிருக்கையில் அதிலிருந்து மீள என்ன வழி? என உக்பதிப்னு ஆமிர்(றழி) என்ற தோழர் வினவ, அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'நா காப்பாயாக!'; உன் வீடே உனக்கு விசாலமானதாக இருக்கட்டும்; உன் தவறுக்காக நீ அழுவாயாக எனப் பதிலளித்தார்கள்; (ஆதாரம் : திர்மிதி - 2408)

மேற்படி நபிமொழி குழப்ப சூழலில் நா காத்தல், வீட்டிலேயே முடங்கி விடுதல், பிறரது தவறுகள் பற்றி அலட்டிக்கொள்ளாது தனது தவறுகளுக்காக வருந்துதல் என்பவற்றின் மூலம் ஈடேற்றத்தைத் தேடச் சொல்லுகின்றது.

நபி (ஸல்) அவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே எனக்கு இஸ்லாத்தில் ஒரு செய்தியைக் கூறுங்கள்; அதன் பின் இஸ்லாம் பற்றி நான் அறிந்து கொள்ள வேண்டுமாயின் உங்களைத் தவிர வேறு எவரிடத்திலும் கேட்கத் தேவையில்லை எனும் அளவுக்கு அது எனக்குப் போதுமானதாகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு, நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹ்தான் இறைவன் எனக் கூறிய பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நிற்பாயாக!' எனக் கூறினார்கள். பின்னர் நான் எது விடயத்தில் என் மீது நீங்கள் அதிகம் அஞ்சுகிறீர்கள்? எனக் கேட்டதற்கு, தனது நாவைப் பிடித்து 'இதுதான்' என்றார்கள் என சுபியான் இப்னு அப்துல்லாஹ் (றழி) அவர்கள் கூறுகிறார்கள்.

இங்கே இவர் ஏகத்துவத்தில் நிலையாக நிற்பதாகக் கூறிய பின்னரும் உன்னிடத்தில் நாவின் விபரீதங்களையே நான் அதிகம் அஞ்சுகின்றேன் என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பது நோக்கத்தக்கது. சிந்தனையில்லாமல் பேசப்படும் சிறு வார்த்தை கூட வாழ்வை சீர்கெடுத்துவிடும் என்பதை பின்வரும் நபிமொழி தெளிவாக உணர்த்துகின்றது. நாவடக்கம் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஹதீஸ்கள் நாவை உரிய முறையில் பேணாதவர்கள் எவ்வாறு இறைவனின் தண்டனைக்கு இலக்காவர் என்பதையும் கூறுகின்றன.

முன்னொரு காலத்தில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒருவர் வணக்கவாளி, மற்றவர் பொடுபோக்கானவர். இந்த வணக்கவாளி சதாவும் மற்றவருக்கு உபதேசம் செய்து வந்தார். ஒரு நாள் அந்த மனிதர் இவரைப் பார்த்து ''என்னைக் கண்காணிப்பவனாக அல்லாஹ் உன்னை அனுப்பவில்லை. நீ உன் வேலையைப் பார்'' என்றான். இதைக் கேட்ட அந்த வணக்கவாளி ''நிச்சயமாக அல்லாஹ் உன்னை மன்னிக்க மாட்டான்'' என்று கூறிவிட்டார். நாளை மறுமையில் அந்த இருவரும் நிறுத்தப்படும்போது அல்லாஹ் அந்த பொடுபோக்கானவரை மன்னித்து வணக்கவாளியைப் பார்த்து ''நான் மன்னிக்க மாட்டேன் என்று கூற உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன் செயல்களை நான் அழித்துவிட்டேன்'' என்று கூறி நரகத்துக்கு அனுப்புவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஜுன்துப் (றழி), ஆதாரம்: முஸ்லிம்)

இங்கு இவர் தனக்குத் தகுதியில்லாத, பூரண அறிவு இல்லாத விடயம் பற்றி பேசியதால் தண்டிக்கப்படுவதைக் காணலாம். பின்வரும் நபிமொழிகள் மனிதன் மொழியும் ஒவ்வொரு

வார்த்தைகளும் கூட அவனது மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்கு அல்லது அழிவுக்கும் காரணமாகிவிடும் என்பதை மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

ஓர் அடியான் சிந்திக்காமல் ஒரு வார்த்தையைப் பேசுகிறான். அதுவோ அவனை நரகை நோக்கி கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையில் உள்ள தூரமளவு நெருக்கி விடுகின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூஹுறைறா, ஆதாரம்: புகாரி, முஸ்லிம், திர்மிதி)

ஓர் அடியான் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடித் தரும் ஒரு வார்த்தையைப் பேசினால் அவனே நினைக்காத அளவுக்கு மறுமையில் அவன் அல்லாஹ்வைச் சந்திக்கும் போது கூலி வழங்குவான். இவ்வாறே தவறான வார்த்தை பேசியவனுக்கு அவன் நினைத்துப் பார்க்காத அளவுக்கு தண்டனையை வழங்குவான் என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் மூலமாக பிலால் இப்னு ஹாரிஸ் அல் முஸன்னீ (றழி) அறிவிக்கிறார்கள். (முஅத்தா, திர்மிதி, அஹ்மத்)

மேற்படி நபிமொழிகள் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கூலி உண்டு என்பதையும் எதையும் சிந்தித்து நிதானமாகவே பேசவேண்டும் என்பதையும் உணர்த்துகின்றன. மனிதனின் பேச்சு அவனது நல்லறங்களைக் கூட அழித்துவிடும் என்பது பின்வரும் அல்குர்ஆன் வசனங்களுடாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன.

> **“கனிவான சொல்லும் மன்னித்தலும் (தருமம் செய்தபின் சொல்லிக் காண்பிப்பதின் மூலம்) நோவினையைத் தொடரும்படிச் செய்யும் தர்மத்தை விட சிறந்ததாகும். (அல்குர்ஆன்-2:263)**
>
> **“விசுவாசிகளே, தர்மம் செய்து விட்டு சொல்லிக்காட்டுவது கொண்டும், தர்மம் பெற்றவனை நோவினை செய்வது கொண்டும் உங்களுடைய ஸதகாக்களை நீங்கள் அழித்து விடாதீர்கள் (அல்குர்ஆன்-2:264)**

என்ற வசனங்கள் தர்மத்தைத் தொடர்ந்து ஒருவன் பேசும் பேச்சு அவனது தர்மத்தையே அழித்துவிடும் என்ற கருத்தைத் தருகின்றது. தர்மம் கொடுக்காவிட்டாலும் நல்ல வார்த்தை மூலம் நல்லறத்தைத் தேடிக்கொள்ள முடியும் என்பதை இதிலிருந்து உணரலாம். பின்வரும் நபிமொழி நாவைப் பேணுவதன் அவசியத்தை மிகத் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றது.

‘‘ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே, இன்னவள் அதிகமாக நோன்பு பிடிக்கிறாள், அதிகமாக தான தர்மங்கள் செய்கிறாள். ஆனால் அப்பெண் பக்கத்து வீட்டினருக்கு தன் நாவால் துன்பம் தருகிறாள். என கேட்டபோது அவள் நரகத்தில் இருப்பாள் என நபி(ஸல்) கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே இன்னவள் குறைவாக நோன்பு நோற்பாள் தர்மங்கள் செய்கிறாள் தொழுகிறாள். இக்த் என்ற இடத்தில் உள்ள காளை மாடுகளை தர்மம் செய்கிறாள். ஆனால் தன் நாவால் பக்கத்து வீட்டாருக்கு துன்பம் தருவதில்லையே என கேட்ட போது இந்த பெண் சுவனத்தில் இருப்பாள் என நபி(ஸல்) விளக்கம் அளித்தார்கள்.’’ (அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) நூல்கள்: அஹ்மத், பைஹகீ)

‘‘அல்லாஹ்வின் தூதுரே, என்னைச் சுவனத்தில் நுழையச் செய்து, நரகத்தை விட்டும் தூரமாக்கக் கூடிய ஒரு விடயத்தைக் கற்றுத்தாருங்கள்’’ எனக் கூறினேன். அதற்கு ‘‘நீர் மிகப்பெரிய விடயத்தைப் பற்றி வினவிவிட்டீர், ஆயினும் எவருக்கு இறைவன் இதை இலகுவாக்கினானோ அவருக்கு அது இலகுவானதே எனக் கூறி இஸ்லாத்தின் அடிப்படை விடயங்களையும் சில நல்லறங்களையும் கூறிவிட்டு இவை அனைத்தையும் அழித்துவிடக் கூடியதை உனக்கு அறிவிக்கட்டுமா? என்றார்கள். நான் ஆம் என்றதும் அவர்கள் தமது நாவைப் பிடித்துக்காட்டி ‘இதனைப் பேணிக்கொள்’ என்றார்கள். இறைத்தூதர் அவர்களே நாவைக்கொண்டு பேசுவதாலும் நாம் பிடிக்கப்படுவோமா? என நான் வினவினேன். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள்: மனிதர்கள் தம் நாவால் அறுவடைகள் செய்ததைத் தவிர அவர்களை நரக நெருப்பில் முகங்குப்புறத் தள்ளக் கூடியது வேறெதுவும் உண்டா? என்று கேட்டார்கள். (ஆதாரம் : முஆத், திர்மிதி, அஹ்மத், இப்னு மாஜா)

இந்நபிமொழி நாவுதான் பெரும்பாலும் மனிதன் நரகில் முகங்குப்புற வீசப்படக் காரணமாக அமையும் என்பதையும் கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், இரவு வணக்கம், ஸதகா போன்ற அனைத்து நல்லறங்களையும் கூட அது நாசம் செய்து விடும் என்பதையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

## முடிவுரை

மனிதனது செயற்பாடுகள் அனைத்தும் மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களால் ஆற்றத்தக்கன. திரிகரணங்களில் மொழி மிக முக்கியமான காரணமாகும். அவற்றின் பெறுமானம் ஹதீஸ்களில் தெளிவாகப் புலப்படுகின்றது. மனிதனது விழுமியம் சார்ந்த நடத்தைகளில் மொழியாகிய நா பெரும் பங்காற்றுகின்றது. இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற இந்த நாவைப் பேணுப்பாதுகாத்து நல்ல முறையில் மாத்திரம் அதனைப் பயன்படுத்துவதற்குரிய வழிகாட்டல்களை ஹதீஸ்களுடாக இங்கு பார்க்கப்பட்டுள்ளது. எனவே ஹதீஸ்களில் வலியுறுத்தப்படுகின்ற நாவடக்கம் தொடர்பான சிந்தனைகள் உலகம் இருக்கும் வரை நின்று நிலைக்கும்.

## உசாத்துணை நூல்கள்


1. Akram Diya Al-umeri. (1981),**Madinan Society at the time of the prophet**, International Islamic publishing house,Riyadh.
2. அபுல் அ.்.லா மௌதூதி.(1968), **ஒழுக்கம் பேண ஒரே வழி,** இஸ்லாமிய நிலையம், சென்னை.
3. அப்துல் கரீம் ம. (1987), **உலக ஒற்றுமைக்கு ஒரே வழி- இஸ்லாம்**, பஷாரத் பப்ளிஷர்ஸ், சென்னை.
4. ஏம்பல் தஜம்முல் முஹம்மது. (1998), **இஸ்லாம் காட்டும் சமய நல்லிணக்கம்**, நிவ்லைட் புக்ஸ் கோனர், புதுக்கோட்டை, இந்தியா.
5. ஷஹீத் செய்யத் குதுப்.(1977), **இஸ்லாமிய வாழ்க்கை நெறி** தாருல் குர்ஆனில் கரீம், சிரியா.
6. முஹம்மது அல் கஸ்ஸாலி.(2002), **இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்,** இக்ரா பதிப்பகம், சென்னை.